www.Padasalai.Net www.TrbTnpsc.com


# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

**NEET , JEE AND BOARD EXAM பயிற்சி மையம்,**
**SBM பள்ளி வளாகம், திருச்சி மெயின் ரோடு, நாமக்கல்**
**அலைபேசி : 99655-31727, 94432 - 31727**


## பத்தாம் வகுப்பு - தமிழ்

## முதல் இடைப்பருவத் தேர்வு – ஜூலை 2019

**மொத்த மதிப்பெண்கள் : 50**

## விடைக்குறிப்பு

| | | |
|---|---|---|
| | **பகுதி – 1** | **1x3=3** |
| **I. சரியான விடையைத் தேர்வு செய்க** | | |
| 1 | இ) தென்மொழி | 1 |
| 2 | ஆ) சிலப்பதிகாரம் | 1 |
| 3 | ஆ) சிலேடையணி | 1 |
| **II. கோடிட்ட இடத்தை நிரப்புக** | | **1x3=3** |
| 4 | சருகு | 1 |
| 5 | பாரதியார் | 1 |
| 6 | மாலை | 1 |
| **III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய அளவில் விடையளிக்கவும்** | | **3x2=6** |
| 7 | **வசனக்கவிதை:**<br>☞ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படுகிறது. ஆங்கிலத்தில் Prose Poetry (Free verse) என்றழைக்கப்படும் இவ்வடிவம் தமிழில் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது<br>☞ உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்கும் இடங்களில் யாப்பு, தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் இவ்வடிவத்தை இலகுவாகக் கையாண்டுள்ளார். இவ்வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று. | 1<br><br>1 |
| 8 | சருகும் சண்டும் ஒன்றல்ல. இரண்டும் வேறுபட்டவை.<br>**காரணம்:**<br>**சருகு:** காய்ந்த இலை<br>**சண்டு :** காய்ந்த தாளும் தோகையும் | 1<br><br>1 |
| 9 | **காற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள்:**<br>❖ காற்று<br>❖ வளி<br>❖ தென்றல்<br>❖ புயல்<br>❖ சூறாவளி | 2 |
| 10 | **பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் :**<br>❖ உலகியல் நூறு<br>❖ பாவியக்கொத்து<br>❖ நூறாசிரியம்<br>❖ கனிச்சாறு<br>❖ எண்சுவை எண்பது<br>❖ மகபுகுவஞ்சி<br>❖ பள்ளிப்பறவைகள். | 2 |

| | | |
|---|---|---|
| 11 | பாப்பத்தே - பத்துப்பாட்டு<br>எண்தொகையே - எட்டுத்தொகை } பதினெண்மேல்கணக்கு நூல்கள்<br>நற்கணக்கே - பதினெண்கீழ்க்கணக்கு | 2 |
| **IV. ஏதேனும் இரு வினாக்களுக்கு சிறு அளவில் விடை தருக.** | | **2x4=8** |
| 12 | **பாரதியின் வேண்டுகோள்:**<br>❖ காற்றே மலர்களில் உள்ள மகரந்தத் தூளினைச் சுமந்து மனிதனை மயக்கும் இனிய நறுமணத்துடன் வீசி வா!<br>❖ இலைகளின் மீதும் நதியின் நீர் அலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த உயிர் காற்றினை எங்களுக்குக் கொடு!<br>❖ எங்கள் உயிராகிய நெருப்பு நீடித்து நன்கு ஒளிவிட்டு எரிய நன்றாக வீசு!<br>❖ வலிமை குன்றிப்போய் மிகமெதுவாக வீசி உயிரை அவித்துவிடாதே! | 1<br>1<br>1<br>1 |
| 13 | **இளம் பயிர்கள் ஐந்தின் பெயர்கள்:**<br>❖ கண்ணன் வயலில் **நெல்நாற்றிற்குத்** தண்ணீர் பாய்ச்சினான்.<br>❖ தாத்தா நிறைய **தென்னம்பிள்ளைகளை** வாங்கி வந்தார்.<br>❖ **கத்தரி நாற்றி**ல் வெட்டுக்கிளிகள் இருந்தன<br>❖ **மாங்கன்று** மழைக்குப்பிறகு தளிர் விட்டுள்ளது<br>❖ வாழைமரத்தினடியில் **வாழைக்கன்றுகள்** உள்ளன.<br>❖ வடலி- காட்டில் பனைவடலியைப் பார்த்தேன்<br>❖ பைங்கூழ் - சோளப் பைங்கூழ் பசுமையாக உள்ளது | 4 |
| 14 | **தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமை:**<br>முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்<br>மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்<br>அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு<br>இணைகிடந்த தேதமிழ் ஈண்டு<br>**- தனிப்பாடல் திரட்டு**<br>**தமிழ் :**<br>தமிழ், தமிழ், இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.<br>**கடல்:**<br>கடல், முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது; மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. | 2<br>2 |
| **பகுதி - ஆ**<br>**V. சரியான விடையைத் தேர்வு செய்க.** | | **1x3=3** |
| 15 | இ) வைகை | 1 |
| 16 | இ) வினைத்தொகை | 1 |
| 17 | ஆ) மூன்று | 1 |
| **VI. கோடிட்ட இடத்தை நிரப்புக** | | **1x3=3** |
| 18 | வினைத்தொகை | 1 |
| 19 | தனிமொழி | 1 |
| 20 | நீண்டு ஒலித்தல் | 1 |

| VII. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய அளவில் விடையளிக்கவும் | | 3x2=6 |
|---|---|---|
| 21 | **உயிரளபெடை:**<br>❖ செய்யுளில் ஓசை குறையும்போது அந்த ஓசையை நிறைவு செய்ய உயிர் நெடில் எழுத்துகள் ஏழும் அளபெடுக்கும்.<br>❖ அளபெடுக்கும் போது அவற்றுக்கு இனமான குறில் எழுத்துகள் பக்கத்தில் வரும்.<br>❖ சான்று : உழாஅர் | 2 |
| 22 | மோர்க்குடம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை<br>தாய்தந்தை - உம்மைத்தொகை | 1<br>1 |
| 23 | **தொழிற்பெயர்** / **வினையாலணையும் பெயர்**<br>வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும் / தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும்<br>காலம் காட்டாது / காலம் காட்டும்<br>படர்க்கைக்கே உரியது / மூவிடத்திற்கும் உரியது<br>எ.கா: பாடுதல், படித்தல் / எ.கா: பாடியவள், படித்தவர் | 2 |
| 24 | கெடுதல் : தொழிற்பெயர்<br>கேடு : முதனிலை திரிந்த தொழிற்பெயர்<br>தட்டு : முதனிலைத் தொழிற்பெயர்<br>நடவாமை : எதிர்மறைத் தொழிற்பெயர் | 1<br>1 |
| **VIII. விடையளி** | | **5** |
| 25 | அடவி : காடு, சோலை<br>பழனம் : சேறு, வயல் | 1 |
| 26 | நேற்று என்னைப் பார்த்தவர் எனது உறவினர். | 1 |
| 27 | எழுகதிர் - வினைத்தொகை | 1 |
| 28 | விடு - விடுதல்<br>காண் - காணுதல் | 1 |
| 29 | புல் - புற்கட்டு<br>பழம் - பழக்குவியல் | 1 |
| 30 | நீங்கள் ஒரு மனிதனிடம் ஏதாவது ஒரு மொழியில் பேசினால் அதை அவன் புரிந்து கொண்டு அவன் மூளைக்குச் செல்கிறது. ஆனால் அவனுடைய மொழியில் பேசினால் இது அவன் நெஞ்சத்தைத் தொடும் | 2 |
| **IX. ஒரு பக்க அளவில் விடையளி** | | **6** |
| 31 | **மனோன்மணீயம் சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்திற்கும், பெருஞ்சித்திரனார் தமிழ்த்தாய் வாழ்த்திற்கும் உள்ள ஒற்றுமைகள்:**<br>**முன்னுரை:**<br>சின்னக்குழந்தையின் சிரிப்பும் ஆனவள், பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள். அறிவைப் பெருக்குபவள், அன்பை வயப்படுத்துபவள், செப்புதற்குரிய நம் அன்னைத் தமிழ் மொழியை நாம் போற்றுவோம்.<br>**மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து:**<br>❖ தமிழ்தாயை சுந்தரனார் அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலில், நீரலைகள் எழுந்து ஆர்ப்பரிக்கின்ற கடலைத் தன் ஆடையாய் உடுத்திக் கொண்டுள்ள நிலமாகிய பெண்ணுக்கு அழகிய முகமாகத் திகழ்வது பாரத கண்டம்.<br>❖ அம்முகத்திற்கு அழகிய பிறை போன்ற நெற்றியாகத் திகழ்வது. | |

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | தெற்குப்பகுதி, அந்நெற்றியில் இட்டுக்கொண்ட குங்குமம் போல புகழ் ஒளி வீசித் திகழ்வது திராவிட நாடு.<br>❖ அக்குங்குமத்தின் வாசனையைப் போல் அனைத்துப் பகுதி மக்களும் இன்பம் அடையும்படி எட்டுத் திசைகளிலும் பரவி வாழ்கின்ற தமிழ் என்னும் தெய்வமே தொன்று தொட்டு வாழ்ந்தாய் என்றாலும் உன் பெருவாழ்வு புதுமைக்குப் புதுமையாய் இன்றும் இளமையாய் விளங்குவது.<br>❖ தமிழ்த்தாயே உன் பேராற்றலை வியந்து செய்வதறியாது மெய்மறந்து வாழ்த்துகின்றோம் என வாழ்த்துகின்றார்.<br>**பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து:**<br>❖ அழகாய் அமைந்த செந்தமிழே! அன்னை மொழியே! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே பதினெண்கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே பொங்கியெழும் நினைவுகளால் தமிழ்த்தாயே! உன்னைத் தலைபணிந்து வாழ்த்துகின்றோம் எனப் பெருஞ்சித்திரனார் வாழ்த்துகின்றார்.<br>**ஒப்பீடு :**<br>❖ மனோன்மணீயம் சுந்தரனார் அவர்கள் நிலம் என்னும் பெண்ணின் முகமாகத் திகழும் பாரத கண்டத்தில் அழகிய நெற்றியாகத் திகழ்வது தென்தமிழ்நாடு என்றும் அதில் குங்குமம் போல் திகழ்வது திராவிட நாடு என்கிறார். பழமையான மொழியாய் இருந்தாலும் புதுமைக்குப் புதுமையாய் இளமையாய்த் தன்மை நிலை நிறுத்தி எட்டுத்திசைகளிலும் பரப்பி வாழ்கிறது தமிழ் எனத் தமிழை வாழ்த்துகிறார்.<br>❖ பெருஞ்சித்திரனார் அவர்கள் பழமையான மொழியாகக் குமரிக்கண்டத்தில் தோன்றி பாண்டிய மன்னனின் மகளாய் அரசாண்ட பெருமைக்குரியவள் என்றும் காப்பியங்களின் வடிவமாய்த் திகழும் தமிழ்த்தாயே உன்னைத் தலைபணிந்து வாழ்த்துகிறோம் எனத் திராவிட நாட்டில் பிறந்து வளர்ந்த தமிழ் அன்னையைப் போற்றி பாடுகின்றார்.<br>**முடிவுரை:**<br>❖ வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட தமிழ் யாவற்றையும் கவிதையாகக் கொண்டது. உணர்ந்து கற்றால் கல் போன்ற மனத்தையும் கற்கண்டாக்குவது.<br>❖ பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய்த் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ள தமிழ் மொழியை அதன் பெருமையை உணர்ந்து போற்றுவோமாக. | 6 |
| | **(அல்லது)** | |
| 32 | **காற்றைப் பற்றி பாரதியாரின் வருணனைகள்:**<br>❖ காற்றே மலர்களில் உள்ள மகரந்தத் தூளினைச் சுமந்து மனிதனை மயக்கும் இனிய நறுமணத்துடன் வீசி வா!<br>❖ இலைகளின் மீதும் நதியின் நீர் அலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த உயிர் காற்றினை எங்களுக்குக் கொடு!<br>❖ எங்கள் உயிராகிய நெருப்பு நீடித்து நன்கு ஒளிவிட்டு எரிய நன்றாக வீசு!<br>❖ வலிமை குன்றிப்போய் மிகமெதுவாக வீசி உயிரை | 6 |



ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

| | | |
|---|---|---|
| | அவித்துவிடாதே!<br>❖ பேய் போல் கடுங்காற்றால் வீசி உயிரை மடித்துவிடாதே!<br>❖ காற்றே நீ மெதுவாக, சீராக, நெடுங்காலம் வீசிக்கொண்டிரு. உமக்கு நாங்கள் பாட்டுகள் பாடுகிறோம், புகழ்ச்சிகள் கூறுகிறோம். உன்னை வழிபடுகின்றோம்.<br>என 'காற்றே வா' என்னும் கவிதையில் பாரதியார் கூறும் கருத்துகள் ஆகும். | |
| **X.** | **அடிபிறழாமல் எழுதுக** | **5** |
| | ***அழகார்ந்த செந்தமிழே!***<br>*அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!*<br>*முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!*<br>*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*<br>*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!*<br>*தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!*<br>*இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!*<br>*மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!*<br>*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!*<br>- பாவலரேறு பெருஞ்சித்திரனார் | |

SHRI KRISHNA ACADEMY

✍ CREATIVE QUESTIONS ,MATERIALS(GUIDE), FULL TEST QUESTION PAPERS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE in ALL SUBJECTS.

→ For MORE DETAILS - 99655 31727 , 94432 31727

நாமக்கல் மாவட்டம்

# முதல் இடைப் பருவத் தேர்வு - ஜூலை - 2019

பத்தாம் வகுப்பு

தமிழ்

நேரம் : 1-30 மணி மதிப்பெண்கள் : 50

## பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்வு செய்க: 1 × 3 = 3

1. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடு
   (அ) கனிச்சாறு (ஆ) பள்ளிப்பறவைகள் (இ) தென்மொழி
2. வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் – என்று கூறும் இலக்கியம்
   (அ) மணிமேகலை (ஆ) சிலப்பதிகாரம் (இ) கம்பராமாயணம்
3. இரட்டுற மொழிதல் அணியின் வேறு பெயர்
   (அ) உவமையணி (ஆ) சிலேடையணி (இ) உருவக அணி

II. கோடிட்ட இடத்தை நிரப்புக: 1 × 3 = 3

4. காய்ந்த இலை .................. என அழைக்கப்படும்.
5. நீடு துயில் நீக்கப்பாடி வந்த நிலா என்று புகழப்பட்டவர் .................. .
6. முல்லை நிலத்தின் சிறு பொழுது .................. .

III. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய அளவில் விடையளிக்கவும்: 3 × 2 = 6

7. வசனக்கவிதை – குறிப்பு வரைக.
8. சருகும் சண்டும் ஒன்றா? காரணம் தருக.
9. காற்றைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?
10. பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்கள் 4 எழுதுக.
11. இன்னறும் பாப்பத்தே, எண்தொகையே, நற்கணக்கே – இவ்வடிகள் குறித்து நீவிர் அறிவன யாவை?

IV. ஏதேனும் இரு வினாக்களுக்கு சிறு அளவில் விடை தருக: 2 × 4 = 8

12. காற்றை எவ்வாறு வீசுமாறு பாரதியார் கேட்டுக்கொள்கிறார்?
13. புளியங்கன்று ஆழமாக நட்டேன் –இது போல இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை தொடர்களில் அமைக்க.
14. தமிழுக்கும் கடலுக்கும் உள்ள ஒற்றுமையைப் பட்டியலிடுக.

## பகுதி - ஆ

V. சரியான விடையைத் தேர்வு செய்க: 1 × 3 = 3

15. பொதுமொழியைத் தேர்ந்தெடு
   (அ) கண் (ஆ) படம் வரைந்தான் (இ) வைகை
16. காலம் கரந்த பெயரெச்சம் .................. ஆகும்.
   (அ) உவமைத் தொகை (ஆ) பண்புத் தொகை (இ) வினைத் தொகை
17. உயிரளபெடை .................. வகைப்படும்.
   (அ) இரண்டு (ஆ) மூன்று (இ) ஐந்து

VI. கோடிட்ட இடத்தை நிரப்புக: 1 × 3 = 3

18. தொடுதிரை என்பது .................. தொகைநிலைத்தொடர்.
19. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது .................. .
20. அளபெடை என்ற சொல்லின் பொருள் .................. .

VII. ஏதேனும் மூன்று வினாக்களுக்கு குறுகிய அளவில் விடையளிக்கவும்: 3 × 2 = 6

21. உயிரளபெடையை விளக்குக.
22. மோர்க்குடம், தாய்தந்தை – எவ்வகைத் தொகைநிலைத் தொடர்கள்?
23. தொழில்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?
24. கெடுதல், கேடு, தட்டு, நடவாமை – இச்சொற்களின் தொழிற்பெயர்கள் யாவை?

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**VIII. விடையளி:** 5

25. அடவி, பழனம் – அகராதி கூறும் பொருள் எழுதுக.
26. நேற்று என்னைப் பார்த்தார். அவர் எனது உறவினர்.
(வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்று)
27. எழுகதிர் – இச்சொல்லில் உள்ள தொகையைக் கண்டறிந்து எழுதுக.
28. விடு, காண் – விகுதிகளை இணைத்து தொழிற்பெயர் உருவாக்குக.
29. புல் ................... , பழம் ..................... – கூட்டப்பெயர்களை கண்டு பிடித்து எழுதுக.
30. மொழி பெயர்க்க: 2
If you talk to a man in a language he understand that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.

**IX. ஒரு பக்க அளவில் விடையளி:** 6

31. மனோன்மணீயம் சுந்தரனார் தமிழ்த்தாய் வாழ்த்திற்கும், பெருஞ்சித்திரனார் தமிழ்த்தாய் வாழ்த்திற்கும் உள்ள ஒற்றுமைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

32. பாரதியார் காற்றை எவ்வாறு வருணிக்கிறார்?

**X. அடிபிறழாமல் எழுதுக:** 5

'அன்னைமொழியே' எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

* * * * *

ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி 99655-31727